# இஸ்லாமிய நாகரிகத்தின் சிறப்பம்சங்கள்

**இஸ்லாமிய நாகரிகம் க.பொ.த (உ/த) – 01**

**ஸமூன் றமழான் (ஸலபி)**

இன்று உலக மக்களின் வாழ்க்கை முறையை இனங்காட்டுவதற்காகக் கலாசாரம், பண்பாடு, நாகரிகம் போன்ற சொற்களைக் கையாளும் மரபு காணப்படுகிறது. இம்மூன்று சொற்களும் பொதுவாக ஒரே கருத்தில் பயன்படுத்தப்பட்டாலும் நாகரிகம் என்ற சொல் ஏனைய பதங்களை விடவும் வித்தியாசமான கருத்தில் பயன்படுத்தப்படுவதும் உண்டு.

கலாசாரம், பண்பாடு போன்ற தமிழ்ச் சொற்களுக்குப் பொருத்தமாக ஆங்கிலத்தில் Culture என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. ஆங்கில அகராதிகளில் அப்பதத்திற்குச் "சீராகச் சிந்திக்கின்ற, முன்னேற்றம் கண்ட, ஆய்வு மனப் பாங்குள்ள, பண்பட்ட மனிதன்" என்ற கருத்து வழங்கப்படுகின்றது.

உலக வரலாற்றில் இப்பதப் பயன்பாடு பற்றி பல்வேறு வரைவிலக்கணங்கள் காணப்படுகின்றன. அவையாவன:

"மனித இன வரலாற்றின் ஒவ்வொரு காலகட்டத்திலும் மக்கள் செய்து கொண்ட கருவிகள், அவர்களது சமூக பழக்க வழக்கங்கள், சமயக் கொள்கைகள், நம்பிக்கைகள் என்பவற்றின் அடியாக உருவெடுத்த அறிவு நிலை" என மானிடவியலாளர்கள் வரைவிலக்கணப்படுத்துகின்றனர்.

கலாசாரம் பற்றி வரலாற்றாசிரியர்கள் பின்வருமாறு வரைவிலக்கணப் படுத்துகின்றனர்.

"மக்கள் தொகுதிகள், சமூகங்கள், தேசங்கள், சாம்ராஜ்யங்கள் என்பவற்றின் குறித்த ஒரு காலத்தில் நிலவிய சிந்தனைகள், பழக்க வழக்கங்கள், மரபுகள் பண்பாடுகள் என்பவற்றை உணர்த்தும் சொல்லாகும்."

இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய சமூகவியலாளரும் வரலாற்றாசிரியருமான இப்னு கல்தூன் கலாசாரம் என்பதற்குப் பின்வரும் விளக்கத்தை முன்வைக்கிறார். கலாசாரம் என்ற சொல்லைச் சுட்டுவதற்கு இவர் தஹ்ஸீப் என்ற அரபுப் பதத்தைப் பயன்படுத்துகிறார்.

”செம்மை நிலையை அடைந்த ஒரு சமூகத்தில் காணப்படுகின்ற ஒழுக்கவியல், ஆன்மீகம், சமூகவியல், அறிவியல், அழகியல் என்பவற்றின் சங்கமம்” எனக் குறிப்பிடுகின்றார்.

கலாநிதி அமீர் ஹஸன் சித்தீகி என்பவர் கலாசாரம் என்பது “நல்ல பழக்க வழக்கங்கள், நன்நடத்தை, சீரான சிந்தனை என்பவற்றினூடாகப் புலப்படக் கூடிய உளப் பாங்கு” என வரைவிலக்கணப்படுத்தினார்.

மேற்சொன்ன வரைவிலக்கணங்களைத் தொகுத்து நோக்கும் போது மனித வரலாற்றை வகைப்படுத்திக் கூறக் கூடிய காலகட்டங்களை உலகில் தோன்றிய கலாசாரங்கள் என விளங்கலாம்.

இந்த வகையில் 18 ஆம் நூற்றாண்டு காலப் பகுதியில் காலாசாரம் என்பது. “மனிதன் கிரமமாகப் பெற்றுக் கொண்ட பயிற்சிகள், இயல்பான வளர்ச்சிகள் என்பவற்றைக் குறிக்கும்” எனப் புரிந்துகொள்ளப்பட்டது.

19 ஆம் நூற்றாண்டு காலப் பகுதியில் தனி மனிதனது பூரணத்துவம் பற்றிய சிந்தனை எனக் கலாசாரம் என்ற பதத்தினால் அடையாளப்படுத்தப்பட்டது. 20 ஆம் நூற்றாண்டில் கலாசாரம் என்ற சொல் முன்னைய காலங்களை விட வித்தியாசமாகவும், பரந்த அளவிலும் பயன்படுத்தப்பட்டது. அதாவது, ஆன்மீகவியல் அறிவியல், சடப்பொருட்கள் என்பவற்றை உள்ளடக்கியதான முழுமையான ஓர் வாழ்க்கை முறை அல்லது வாழ்க்கைத் திட்டம் என்ற பொருளில் கலாசாரம் என்ற பதம் பயன்படுத்தப்பட்டது.

Culture என்ற பதத்தோடு சம்பந்தப்பட்ட நாகரிகம் என்ற சொல் கலாசாரம் என்ற சொல்லை விட வித்தயாசமான அர்த்தங்களில் பயன்படுத்தப்படுகின்றது. நகரமயமாக்கப்பட்ட வாழ்வின் தேற்றப்பாடு என்ற அர்த்தத்தில் வழங்கப்பட்டது. நாகரிகம் என்ற சொல்லுக்கு இஸ்லாமிய சமூகவியலாளரும், வரலாற்றாசிரியருமான இப்னு கல்தூன் (ரஹ்) என்பவர் நகர வாழ்வின் விளைவுகள் அல்லது பெறுபேறுகள் என வரைவிலக்கணப்படுத்தினார். கலாநிதி அமீர் ஹஸன் சித்தீகி, ஒரு சமூகத்தின் பண்புகளைக் குறிக்கின்ற ஒரு பொதுச்சொல் என விளக்கினார்.

பொதுவாக நாகரிகம் (Civilization) என்ற பதத்தை, குறிப்பிட்ட ஒரு சமூகத்தின் முன்னேற்றமடைந்த வளர்ச்சிக் கட்டத்தை சுட்டிக் காட்டப் பயன்படுத்துவதுண்டு. இவ்விரு பதங்களின் விளக்கங்களைத் தொகுத்து நோக்கும் போது, கலாசாரம் என்பது செம்மையாகவும், சீராகவும் சிந்திக்கின்ற உளப்பாங்கு அல்லது உள உணர்வு

என்பவற்றுடன் சார்ந்த கருத்தைத் தர, நாகரிகம் என்ற பதம் கலாசாரம் அல்லது பண்பாட்டின் புறத் தோற்றத்தைச் சுட்டிக் காட்டுவதைக் காணலாம்.

கலாசாரங்களினதும், நாகரிகங்களினதும் தேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் பின்வரும் மூன்று வகையான அறிவுகள் துணை நிற்கின்றன.

1. மனிதனது புத்தி, பகுத்தறிவு ஆராய்ச்சி என்பவற்றினூடாகக் கிடைக்கும் அறிவு.
2. மனித சமூகங்களின் வாழ்க்கையில் கிடைக்கப் பெற்ற அனுபவங்கள்.
3. வஹி, இல்ஹாம் (உள உணர்வு) என்பன மூலம் கிடைக்கப் பெற்ற இறையறிவு.

மேற்சொன்ன அறிவுகளில் முதலிரண்டு வகையான அறிவுகளிலும் சரியானவை அடங்கியிருப்பது போல அவற்றில் பிழைகளும், குறைகளும் அடங்கியுள்ளன. மூன்றாவது வகை அறிவைப் பொறுத்த வரைக்கும் அது இறைவனிடமிருந்து கிடைக்கப் பெற்றமையால் அதில் பிழைகளோ, தவறுகளோ இருக்க முடியாது. ஆகையால் ஏனைய இரு வகை அறிவுகளை விட இவ்வறிவு சிறந்ததாக உள்ளது.

உலகில் தோன்றிய நாகரிகங்கள் பெரும்பாலும் முன்னைய இரு வகை அறிவுகளையும் அடிப்படையாகக் கொண்டு எழுந்தமையால் அவை நிலைத்திருக்கவில்லை அல்லது சிறப்புற்றுக் காணப்படவில்லை. ஆனால் இஸ்லாமிய நாகரிகம் மூன்றாவது வகை அறிவின் அடிப்படையில் உருவானமையால் இவ்வுலக நாகரிகங்களில் சிறப்புற்று விளங்குவதைக் காணலாம்.

## இஸ்லாமிய நாகரிகத்தின் தனிச் சிறப்புகள்:

இவ்வுலகின் வரலாற்றோடு பல்வேறு நாகரிகங்கள் தொடர்புற்றுக் கணப்படுகின்றது. உலகில் தோன்றிய கிரேக்க நாகரிகம்- அறிவியல் துறையைப் பிரதானமாகக் கொண்டு உலக வரலாற்றில் இடம்பெற்றிருக்கின்றது. அதே போல உரோம நாகரிகம் இராணுவத் துறையிலும், படைப் பலத்திலும் முன்னணி வகித்திருக்கின்றது. இந்திய நாகரிகம் துறவறத்தை மையமாகக் கொண்டு வளர்ந்திருப்பதைக் காணலாம். இந்தப் பண்டைய நாகரிகங்களின் பின்னர், கைத்தொழில் புரட்சியின் விளைவாக இவ்வுலகில் ஐரோப்பிய நாகரிகம் மிளிர ஆரம்பித்தது. இந்த நாகரிகம் புதிய கண்டுபிடிப்புகளையும், உலகியல் கல்வித் துறையையும் அடிப்படையாகக் கொண்டு வளர்ந்திருப்பதைக் காணலாம்.

இவ்வாறான நாகரிகங்களின் வரிசையில் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற நகரிகமே இஸ்லாமிய நாகரிகமாகும். வஹியின் அடிப்படையில் உருவான

இந்நாகரிகம் மனித இனத்தின் உயர் பண்புகளை உயிர்ப்பிப்பதை இலக்காகக் கொண்டு எழுந்தது.

இஸ்லாமிய நாகரிகம் என்பது, இஸ்லாம் கூறுகின்ற வாழ்க்கை முறையையே சுட்டிக் காட்டுகிறது. ஆகையால், குறிப்பிட்ட ஒரு காலத்தில் வாழ்ந்த முஸ்லிம் சமூகம் கொண்டிருந்த தனிப்பட்ட பழக்க வழக்கங்கள், நடைமுறைகள், பௌதீகவளங்கள் என்பன மாத்திரம் இஸ்லாமிய நாகரிகம் என நோக்கப்பட மாட்டாது. மாறாக இஸ்லாமியச் சிந்தனையின் அடிப்படையிலான வாழ்க்கை முறையை ஒத்திருக்கின்ற நாகரிகமே- இஸ்லாமிய வாழ்க்கை முறையே எனக் கருதப்படுகிறது.

உலகில் தோன்றிய நாகரிகங்களில் இஸ்லாமிய நாகரிகம் பல்வேறு விடயங்களில் தனிச் சிறப்புற்று விளங்குகிறது. அதன் கொள்கைகள், போதனைகள், அது முன்வைக்கும் வழிகாட்டல்கள், மனித சமூகத்தை வழி நடாத்த கைக்கொள்ளும் வழிமுறைகள், சிந்தனைகள், நடைமுறைகள் என்பன அதன் தனிச் சிறப்புக்கு வழிவகுத்தன. இந்த வகையில் அவற்றைப் பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்.

1. **வஹியை அடிப்படையாகக் கொண்டது:**

உலகில் தோன்றிய நாகரிகங்களை நோக்கும் போது, அவை குறிப்பிட்டதொரு ஒரு சூழல் காரணியை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டிருப்பதைக் காணலாம். சில நாகரிகங்கள் உருவாவதற்கு விவசாயம் அடிப்படையாக அமைந்திருக்கலாம். வேறு, சில நாகரிகங்களின் தோற்றத்திற்குத் தனி நபர்களின் முயற்சிகள் அடிப்படையாக அமைந்திருப்பதைக் காணலாம். இஸ்லாமிய நாகரிகத்தைப் பொறுத்த வரைக்கும் அது இறைவனின் வஹியின் அடிப்படையில் எழுந்திருப்பதைக் காணலாம். அந்நாகரிகத்தின் உருவாக்கத்திற்கும், வளர்ச்சிக்கும் காரணமாக முழுமையாக வஹியே அமைந்திருக்கின்றது.

2. **பூரணத்துவத் தன்மை பெற்றது:**

இஸ்லாமிய நாகரிகம் குர்ஆன் – ஸுன்னா ஆகிய மூலாதாரங்களின் ஒளியில் உருவான நாகரிகமாகும். இது ஏனைய நாகரிகங்களைப் போன்று மக்களால் வளர்க்கப்பட்ட ஒன்றல்ல. மாறாக, இறைவனாலேயே பூரணப்படுத்தப்பட்ட இரு பிரதான மூலாதாரங்களையும் அடிப்படையாகக் கொண்டு வளர்ந்தது. அதனால் இந்நாகரிகத்தை ஏற்று வாழும் மக்கள் அவ்விரு மூலாதாரங்களுக்கும் கட்டுப்பட்டு வாழக் கடமைப்பட்டுள்ளனர். ஏனெனில், அவை எவ்விதக் குறைகளும் அற்ற பூரணத்துவமிக்கதாய் அமைந்திருக்கின்றன. அவை மனித வாழ்க்கைக்குத்

தேவையான அனைத்து விடயங்களையும் உள்ளடக்கியதாக அமைந்திருப்பதால், அதன் ஒளியில் வளர்ந்த இஸ்லாமிய நாகரிகம் முழுமைத் தன்மையுடையதாய் காணப்படுகிறது.

### 3. சர்வதேச தன்மை வாய்ந்தது:

இஸ்லாமிய நாகரிகம் இஸ்லாத்தை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்தமையால் சர்வதேச தன்மை வாய்ந்ததாகக் காணப்படுகிறது. இஸ்லாமிய மார்க்கம் எல்லாக் காலத்திற்கும் அனைத்து மக்களுக்குமான இறுதி மார்க்கம் என்பதால், அது சர்வதேச தன்மை வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. காலம், சூழல், பிரதேசம் ஆகிய எல்லைகளைக் கடந்து இஸ்லாத்தைப் பின்பற்றுகின்ற அனைவரும் இஸ்லாமிய நாகரிகத்தின் அங்கத்தவர்களெனப் பறை சாட்டுகின்றது.

அகிலத்தாரின் இரட்சகன் வழங்கிய இறுதித்தூதும், அனுப்பிவைத்த இறைத் தூதரும் அகிலத்துக்கே பொதுவானதாய் அல்லாஹ்வால் பிரகடனப் படுத்தப்பட்டது. அந்த இறுதித் தூதரின் வழிகாட்டல்களின் அடிப்படையில் கட்டியெழுப்பட்ட இஸ்லாமிய நாகரிகம் அவ்வாறே சர்வதேச தன்மை வாய்ந்ததாய் அமைந்திருக்கின்றது.

### 4. நடுநிலைத் தன்மை வாய்ந்தது:

உலகில் தோன்றிய நாகரிகங்களை நோக்கும் போது, சில நாகரிகங்கள் உலகியல் விடயங்களில் மாத்திரம் கவனம் செலுத்துவதைக் காணலாம். வேறு சில நாகரிகங்கள் உலகியலை வெறுத்து வெறுமனே ஆன்மீகத் துறைக்கு மாத்திரம் முக்கியத்துவம் அளிப்பதைக் காணலாம். ஆன்மீகத்தை முதன்மைப் படுத்திய நாகரிகங்கள் உலகியலைப் பாவமாகக் கருதின. உலகியலை முதன்மைபடுத்திய நாகரிகங்கள் ஆன்மீகத்தை பிற்போக்குத்தனமாகவும், முன்னேற்றத்திற்குத் தடையானதாகவும் கருதின. ஆனால் இஸ்லாமிய நாகரிகத்தைப் பொறுத்த வரைக்கும் ஆன்மீகத்திற்காகாக உலகியலை வெறுக்கும் தன்மையோ அல்லது உலகியலுக்காக ஆன்மீகத்தை வெறுக்கும் தன்மையையோ கொண்டிருக்கவில்லை. மாறாக இரண்டையும் ஒன்றினைத்து மேற்கொள்ள வேண்டிய வாழ்க்கை முறையை வலியுறுத்துகின்றது. குறிப்பாக ஆன்மீகத்திற்காக இந்த உலகைச் சிறப்பாகப் பயன்படுத்த வேண்டும் எனப் பணிக்கிறது.

### 5. சமய சார்புத் தன்மை வாய்ந்தது:

இஸ்லாமிய நாகரிகம் வாழ்க்கை முறையையும், சமயத்தையும் வேறுபடுத்தி நோக்குவதில்லை. மனித வாழ்வின் அனைத்துத் துறைகளையும் அது சமயச்

சார்பாகவே நோக்குகிறது. வாழ்க்கை முழுவதையும் இபாதத்தாக கருதுகின்ற இஸ்லாமிய நாகரிகம் சமய சார்பற்ற சிந்தனைகளையும், கொள்கைகளையும் வெறுக்கிறது.

ஒரு நாகரிகம் சிறப்புற்று விளங்கவேண்டுமாயின் அதன் கீழ் வாழும் மக்கள் கட்டுக்கோப்பாய் வாழ வேண்டும். கட்டுக்கோப்பான வாழ்வுக்கு சமய வழிகாட்டல் இன்றியமையாது. சமய வழிகாட்டல் என்பது மனித சிந்தனை கலக்காத இறைவனின் வழிகாட்டல்களைக் கொண்டதாகும். இந்த வகையில் இஸ்லாமிய நாகரிகம் முழுக்க முழுக்க சமய சார்பாய் அமைந்திருப்பது ஏனைய நாகரிகங்களிலிருந்து சிறப்புற்று விளங்கக் காரணமாய் அமைந்திருக்கின்றது.

### 6. மறுமை வாழ்வை இலக்காகக் கொண்டது:

உலகில் தோன்றிய நாகரிகங்களில், இஸ்லாம் கொண்டிருக்கின்ற மறுமை பற்றிய நம்பிக்கை, ஏனைய நாகரிகங்களிலிருந்து தனித்துவம் பெற்று விளங்குவதற்குக் காரணமாக அமைகின்றது. ஏனைய நாகரிகங்களில் மனித வாழ்வு, இவ்வுலக வாழ்வோடு முற்றுப் பெற்று விடுகிறது எனக் கருதப்படுகின்றது. இஸ்லாமிய நாகரிகத்தைப் பொறுத்த வரைக்கும் அது இவ்வுலக வாழ்வின் அடிப்படை இலக்காக மறுமை வாழ்வைக் கருதுகின்றது. ஆதலால் மறுமையின் விளை நிலமாக இவ்வுலக வாழ்வைப் பயன்படுத்துமாறு பணிக்கிறது. இவ்வுலகில் மனிதன் மேற்கொள்கின்ற அனைத்து நடவடிக்கைகளுக்கும் மறுமையில் கணக்குத் தீர்க்க வேண்டும் என்ற கோட்பாட்டைக் கொண்டிருப்பதால் இஸ்லாமிய நாகரிகம் முன்வைக்கும் வாழ்க்கை முறை, ஏனைய நாகரிகங்களது வாழ்க்கை முறையிலிருந்து சிறப்புற்றுக் காணப்படுகிறது.

### 7. ஆண், பெண் ஆகிய இரு பாலருக்கும் தேவையானதும், பொருத்தமானதுமான உரிமைகளையும், கடமைகளையும் கொண்டுள்ளது:

இஸ்லாமிய நாகரிகம் மனித வாழ்வின் அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய நாகரிகம் என்பதால், ஆண்களுக்கென தனியாதான உரிமைகளையும், கடமைகளையும் வைத்திருப்பது போல், பெண்களுக்கெனவும் தனியான உரிமைகளையும் கடமைகளையும் வைத்திருக்கின்றது. இருபாலருக்குமான பொதுவான கடமைகள், உரிமைகள் என்பவற்றையும் அது கொண்டமைந்துள்ளது.

ஒரு சமூகம் எனும்போது அது ஆண் பெண் இருபாலரையும் கொண்டமைந்தது. இறைவனின் வழிகாட்டலின் அடிப்படையில் தோற்றம் பெற்ற இஸ்லாமிய நாகரிகம்,

இறை படைப்பான ஆண் – பெண் ஆகிய இருபாலருக்கும் பொருத்தமான, தேவையான, நடைமுறைச் சாத்தியமான விதிகளையும், தடைகளையும் விதித்திருக்கின்றது. ஆதலால் ஏனைய நாகரிகங்களைப் போலல்லாது ஆண்களும் பெண்களும் இறை அங்கீகாரத்தோடு தமக்கான உரிமைகளையும் கடமைகளையும் அனுபவிக்கும் தன்மை கொண்டிருப்பது இஸ்லாமிய நாகரிகத்தின் தனிச் சிறப்புக்கு சிறந்த எடுத்துக்காட்டு.

8. **நீதிக்கு முன் அனைவரையும் சமமாகக் கொண்டுள்ளது:**

இஸ்லாமிய நாகரிகத்தின் வருகைக்கு முன்னர் மனித குலம் மிருகங்களை விட மோசமாக இருந்தது. பலசாலிகள் பலவீனர்களை அடிமைப்படுத்தி சுரண்டுவதும், முதலாளிகள் தொழிலாளிகளை தமது அடிமையாக நடாத்துவதும், ஆண்டான் – அடிமை என்ற சமூக நிலவரமும் மனித சமூகத்தில் தாராளமாய் காணப்பட்டன.

பிறப்பால், நிறத்தால், தொழிலால் உயர்ந்த குலம் என்றும் தாழ்ந்தவர்கள் என்றும் மனித குலம் பிரிந்திருந்தது. நீதி என்பது உயர் குல்லதின் குத்தகைச் சொத்தாக இருந்து வந்தது. ஆளுக்கொரு நீதி, ஆளுக்கேற்ற நியாயம் என நீதியே அநீதியாய் பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனால், இஸ்லாமிய நாகரிகம் மனிதர்கள் என்ற அடிப்படையில் அனைவரையும் சமமானவர்களாய் கருதியது. இந்த வகையில் அதன் சட்டங்கள் அனைத்தும் குலம், நிறம் போன்ற வேற்றுமைகளின்றி அனைவருக்கும் சமமானதாய் அமைந்திருக்கிறது.

9. **ஏனையோரிடம் காணப்படுகின்ற நல்ல அம்சங்களை உள்வாங்கும் தன்மை கொண்டது:**

மனித குலம் இறைவனின் படைப்பு, அவர்களிடம் காணப்படும் நல்லவை இறைவனிடமிருந்து அவர்கள் பெற்றவை. இவ்வுலகுக்கு இறுதியாய் வந்த அல்குர்ஆனின் ஒளியில் உருவான இஸ்லாமிய நாகரிகம் முன்னைய நாகரிகங்களிலுள்ள நல்லம்சங்களை உள்வாங்கி, அவற்றை மெருகூட்டியது. இந்த நிலை உலக வரலாற்றில் அதன் சிறப்புக்கு வழி வகுத்தது எனலாம்.

10. **இறுக்கமான இறைக் கோட்பாட்டைக் கொண்டிருந்தாலும் மத சகிப்புத் தன்மையை வலியுறுத்துகின்றது:**

உலகில் காணப்படும் மதங்கள் யாவும் இறைவனிடமிருந்து வந்தவையே என்பது தான் இஸ்லாத்தின் நிலைப்பாடு. ஆனால் அவை காலப்போக்கில் மனித கையாடல்களுக்கு உட்பட்டது. அதனால் அவை தூய்மை இழந்தன. அதனால்தான்

இஸ்லாமிய நாகரிகம் ஏனைய சமயங்களையும் மதிக்க வேண்டும், அவர்களுக்கான உரிமைகள் வழங்கப்படல் வேண்டும் என்ற சிந்தனையைக் கொண்டுள்ளது. இந்த வகையில் அது சிறப்புற்றுக் காணப்படுகின்றது.